# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 9, 2026 Weekly E-paper • May 9, 2026







# கசப்பான உண்மை!

சுப.வீரபாண்டியன்

## விடியல் தள்ளிப் போகலாம்; தடுக்க முடியாது!

சொக்கலிங்கம்

## அவர்தான் முதல்வர்

தலையங்கம்

## மக்களால் தோற்கடிக்கப்படவில்லை திமுகழக ஆட்சி!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 9, 2026 Weekly E-paper ● May 9, 2026


# கசப்பான உண்மை!

**சுப.வீரபாண்டியன்**

*யாரும் எதிர்பார்த்திராத வகையில், தமிழ்நாடு சட்டமன்றத்தின் தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ளன!*

*திமுக, அதிமுக கட்சிகளின் இரண்டு பெரும் கூட்டணிகளையே பின்னுக்குத் தள்ளி விட்டு, நடிகர் விஜய் தொடங்கியிருக்கும் 'தமிழ்நாடு வெற்றிக் கழகம்' என்னும் கட்சி 108 இடங்களில் வென்றிருக்கிறது!*

*இப்படி ஒரு புதிய கட்சி தமிழ்நாட்டில் இவ்வளவு இடங்களை முதல் தேர்தலிலேயே பெற்றிருப்பது மிகப் புதிது! அதே மாதிரி, தமிழ்நாட்டில் தொங்கு சட்டமன்றம் ஏற்பட்டிருப்பதும் 1952 ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போது நிகழ்ந்திருக்கிறது!*

*இந்தச் சூழலில் அடுத்து என்ன நடக்கும் என்பதை இந்த நிமிடம் வரையில், யாராலும் கணிக்க முடியவில்லை! எதுவும் நடக்கலாம் என்னும் நிலைதான் நீடித்து வருகிறது!*

*காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் இருந்து பிரிந்து சென்று, தவெக விற்கு ஆதரவு கொடுத்த பின்னும், இன்னும் ஐந்து இடங்கள் ஆட்சி அமைக்க விஜய் கட்சிக்குத் தேவைப்படுகிறது!*



*இதற்கு இடையில், திமுகவின் ஆதரவோடு அதிமுக ஆட்சி அமைக்க வாய்ப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்னும் செய்தியும் வெளிவருகிறது!*

*அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பதற்குச் சான்றாகவே, இன்றைய நிலைமை அமைந்துள்ளது!*


*மக்களுக்கு இதுவரையில் எதையும் செய்திராத, எந்தத் தெளிவான கொள்கையும் இல்லாத விஜய் கட்சிக்கு மக்கள் வாக்களித்திருப்பது ஒரு குழப்பத்தைத் தருகிறது என்றால், இன்னொரு பக்கம் திமுக அதிமுக இணைந்து ஆட்சியை அமைக்கக் கூடும் என்னும் செய்தி அதைவிடக் கூடுதல் குழப்பத்தைத் தருகிறது!*

*மொத்தத்தில் தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் சூழல், ஆரோக்கியமானதாகவோ, மகிழ்ச்சி தரக்கூடியதாகவோ இல்லை என்பதே கசப்பான உண்மை!*

●

## பதவி விலகினார் சுப.வீரபாண்டியன்

**2021 டிசம்பர் மாதம் தமிழ்நாடு அரசின் சமூக நீதிக் கண்காணிப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்ட, திராவிட இயக்கத்தமிழர் பேரவையின் தலைவர், தோழர் சுப. வீரபாண்டியன் அவர்கள், கடந்த 05-05-2026 ஆம் தேதியன்று, அந்தப் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதாகத் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.**



# விழயல் தள்ளிப் போகலாம்; தடுக்க முடியாது!

**சொக்கலிங்கம்**

மனிதன் காலம் காலமாக கையால் உணவை எடுத்து வாய் வழியாகவே உண்கிறான். மாற்றம் வேண்டும் என்பதற்காக உணவு உண்ணும் முறையே மாறிவிடாது. அதுபோல அரசியல் என்பது அடிப்படையில் கொள்கை சார்ந்ததே. மாற்றம் வேண்டும் என்பதற்காக கொள்கை இல்லாமல் போய்விடாது. அதே நேரத்தில் 2026 தேர்தலில் மக்கள் கொள்கைக்காக வாக்களிக்கவில்லை என்று பொதுவாக சொல்லிவிட முடியாது. அதற்கு சான்றாக திமுக கூட்டணிக்கு 1.54 கோடி வாக்குகள் உள்ளன. அதே நேரத்தில், புதியதாக ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்ற நடிகரின் கட்சிக்கு நம்மைவிட 17.5 லட்சம் வாக்குகள் மட்டுமே கூடுதலாக கிடைத்திருக்கின்றன. இருப்பினும் அவர்கள் ஆளுங்கட்சி, நாம் எதிர்கட்சி. இந்த முரண்பாடே இந்தத் தேர்தலின் முக்கியப் பாடமாகும்.

இந்தத் தேர்தல், திமுகவினருக்கு ஒரு தெளிவான உண்மையை உணர்த்தியுள்ளது. சமூக ஊடகங்களில் நாம் இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அரசியல் என்பது களத்தில் மட்டுமல்ல, டிஜிட்டல் உலகிலும் நடக்கிறது. அங்கே நம்முடைய குரல் இன்னும் வலுப்பெற வேண்டியுள்ளது.

நீங்கள் அரசியல் பற்றிய புரிதல் கொண்டவராக இருந்தால், மாதச் சம்பளத்தைத் தாண்டி சமூக நலனில் ஈடுபாடு கொண்டவராக இருந்தால், நாட்டையே ஒரு குடும்பமாகக் கருதுபவராக இருந்தால், வரலாற்றில் ஆர்வம் கொண்டவராக இருந்தால் திமுகவின் இந்தத் தோல்வியை எளிதாக ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக நம் தலைவரின் தோல்வி மனதை அதிகமாகப் பாதிக்கிறது.

ஆனால்வரலாறுஎதைக்கற்றுக்கொடுக்கிறது?பேரறிஞர் அண்ணா கூட தோல்வியை சந்தித்திருக்கிறார்கள். அது முடிவு அல்ல, ஒரு இடைநிறுத்தம் மட்டுமே. அதே உணர்வோடு நாம் இதையும் பார்க்க வேண்டும்.

நாம் அடங்கிக் கொள்ளும் மக்கள் அல்ல. சூழ்நிலை எப்படியிருந்தாலும், எங்கு இருந்தாலும், நம் கருத்தை வலியுறுத்தும் மனப்பாங்கு திமுகவினரின் அடையாளம். இந்தத் தேர்தல் முடிவு நம்மை பின்வாங்கச் செய்யாது; மாறாக, இன்னும் உறுதியாக நிற்கத் தூண்டும்.




மேலும், தற்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய கட்சியின் நிலைப்பாடுகள் பல முக்கிய பிரச்சனைகளில் தெளிவாக இல்லை. தொகுதி மறுவரையறை, இந்தி திணிப்பு, திருப்பரங்குன்றம் தீப சர்ச்சை, நீட் விலக்கு, புதிய தேசிய கல்விக் கொள்கை இவற்றில் அவர்கள் எடுக்கப்போகும் நிலைப்பாடு என்ன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இதனால், இந்தத் தேர்தலில் மக்கள் உண்மையான மாற்றத்திற்காக வாக்களித்தார்களா, அல்லது ஒரு ஏமாற்றத்திற்காகவா என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்கான பதிலை காலமே தரும். ஆனால், அதற்குள் திமுக தன்னைத் தானே சீரமைத்து, வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் தெளிவாக உள்ளது.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## அவர்தான் முதல்வர்

வெற்றியைத் தவறவிட்ட தலைவர் ஸ்டாலின் அவர்கள், அன்று மாலையே தன்னுடைய கொளத்தூர் தொகுதிக்குச் சென்றார். ஆயிரமாயிரம் மக்களுக்கிடையே தன் நன்றியினைத் தெரிவித்தார்.

அழுது கலங்கிய தொண்டர்களை வண்டியில் இருந்தபடியே ஆறுதல் படுத்தினார், நிதானமாக.

வெற்றிபெற்ற விஜய் இன்னமும் தொகுதிப் பக்கம் போகவில்லை. மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி, பாவம் என்ன செய்வார், அவர்?

அமையப்போகும் ஆட்சிக்குத் திமுகழகம், ஆறுமாதங்கள் எந்தவோர் இடையூறும் தராமல் கவனிப்போம்.

மகளிருக்கு விஜயின் தேர்தல் வாக்குறுதியான மாதம் 2,500 ரூபாய் தருவது கடினம் என்றாலும், தொடர்ந்து நாங்கள் கொடுத்த 1,000 ரூபாவையாவது கொடுக்க வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர் என்ற விஜயின் வாக்குறுதிக்கு வாய்ப்பில்லை, என்றாலும் கொடுத்தால்



மகிழ்ச்சிதான் என்று தலைமைத்துவப் பொறுப்போடு பேசியிருக்கும் தலைவர் ஸ்டாலின் அவர்கள், அரசுக்கு நெருக்கடி கொடுக்கவோ அல்லது மறுதேர்தல் நடத்தவதையோ தான் ஏற்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




"ஹல்லோ... உங்களுக்கு ஓட்டுப்போட்டு ஜெயிக்க வச்ச டீவி நாடகம் பாக்கும் குடும்ப பெண்சிட்டிசன் தான் பேசறேன் என் பையன் பான்பராக் தலையன் முதல் ஓட்டு உங்களுக்கு தான் போட்டு இருக்கிறான் ... "

......

"நன்றிலாம் இருக்கட்டும், எப்ப பதவியேற்க போறீங்க?"

.....

"என்னது, இன்னும் தேதியே முடிவு பண்ணலையா?? தயவுசெய்து இன்னும் ரெண்டு நாள்ல பதவியேத்துடுங்க!"

....

"எதுக்கா? எங்க வீட்டுல கேஸ் சிலிண்டர் தீரப்போகுது... நீங்க ஆட்சிக்கு வந்தா வருசத்துக்கு 6 கேஸ் சிலிண்டர் ப்ரீன்னு சொன்னிங்களே... அதான் கேட்டேன்!"

....டொக்!

"என்னது, போனையே கட் பண்ணிட்டிங்க!!!

**- முகநூலிலிருந்து**

# மக்களால் தோற்கடிக்கப்படவில்லை திமுகழக ஆட்சி!

எழில்.இளங்கோவன்

மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள், 2026 தேர்தலில்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார், "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு", ஏற்றுக்கொள்வோம்.

இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு படித்தவர்கள் மிக்க மாநிலம் தமிழ்நாடு. பகுத்தறிவாளர், சுயமரியாதை உடையோர் மிகுந்த மாநிலம். தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றியவர் நம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள். கொளத்தூர் தொகுதியில் அவர் தோற்கடிக்கப் பட்டார் என்பது வியப்பான, வேதனையான செய்தி.

மாற்றம் வேண்டும் என்பது சரிதான். அது வெளிச்சத்தைத் தராமல் இருட்டுக்குள் தள்ளுமானால் அதற்குப் பெயர் மாற்றம் இல்லை. அதிலும் சினிமாவால் சீரழியும் மாற்றம் மிகவும் அபாயகரமானது. அது இன்று நடந்திருக்கிறது.



முதல் தடவையாக வாக்களித்திருக்கும் இளைஞர்கள் கூட்டமும், சினிமா என்ற மாய பிம்பத்தில் வீழ்ந்திருக்கும் இளைஞர்கள் கூட்டமும்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்று சொல்வதைப் பார்க்கிறோம். இதை முற்றிலும் ஒதுக்கிவிடவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை. இதற்குப் பின்னணியில் ஓர் அரசியல் இருப்பதாகத் தெரிகிறது.

வாக்கு எண்ணிக்கைக்கு முதல்நாள் டில்லியில் இருந்து தமிழ்நாடு வந்த பாஜகவின் பியூஸ் கோயல், "நாளை ஆட்சிமாற்றம் ஏற்படும். நாம் ஒரு வசதியான பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைப்போம். இதில் ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தால் கூட, நான் டெல்லியிலிருந்து இவ்வளவு தொலைவு வந்திருக்க மாட்டேன்" என்று பேசியிருக்கிறார். அப்படியானால் ஆட்சிமாற்றம் நடக்கும் என்பது துல்லியமாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. அதுகுறித்துத்துத்தமிழ்நாட்டிற்கு வந்த பியூஸ் கோயல் "ஆட்சி அமைப்போம்" என்று கூறியதன் பின்னணி என்ன? நாற்காலியில் விஜய், அதிகாரத்தில் யார்?

அஸ்ஸாம், மேற்குவங்கம், புதுச்சேரி மாநிலங்கள் பாஜகவிடம் போய்விட்டன. கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி என்றாலும் அக்கட்சியும் பாஜகவின் இன்னொரு அடையாளம்தான். எஞ்சியிருப்பது தமிழ்நாடு ஒன்றுதான்.

தமிழ்நாட்டிற்குள் ஆர்எஸ்எஸ்/பாஜக நுழைய முடியாது என்பது பாஜகவுக்கு நன்கு தெரியும். எடப்பாடியை பலவீனப்படுத்தி ஆட்சிக்கு வரவிடாமல் பார்த்துக்கொண்ட பாஜகவுக்கு இப்போது ஒரு கைப்பாவை தேவைப்பட்டது தமிழ்நாட்டில். சிக்கினார் விஜய் பாஜகவிடம்.

கரூர் 41 பேர் மரணம் குறித்த சிபிஐ வழக்கில் தமிழ்நாடு காவல்துறை போட்ட FIR ஐ அது வாங்கிக் கொண்டது என்றாலும் இதுவரை 'சார்ஜ்சீட்' போடவில்லை. 'ஜனநாயகன்' திரைப்படத்தை வெளியிடுவதில் தகிடுதத்தம். வருமானவரி வழக்கு என்பதும் இதில் அடங்கும்.

ஆர்எஸ்எஸ் இன் முக்கிய புள்ளிகளான குருமூர்த்தி, வேம்பு, ரங்கராஜ் பாண்டே, நிர்மல்குமார், சோதிடர் ராதன் பண்டிட் போன்றோர் தவெகவிற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்றால் தவெகவின் நூல் யாரிடம் இருக்கிறது என்பது புரிகிறது.

இந்தியாவில் மின்னணு வாக்கு இயந்திரங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, மோசடி செய்யப் படுகின்றது என்று 2009ஆம் ஆண்டே குற்றம் சாட்டியவர் பாஜகவின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி.

1982 இல் முதன்முதலில் கேரளாவில் சோதனை செய்யப்பட்ட போதே, இயந்திரத்தில் கோளாறு இருந்ததாகக் கூறி காகித வாக்குச் சீட்டுக்கு மாற்றப்பட்டது. அது அரசியல் ரீதியான விமர்சனமாக 2009ஆம் ஆண்டிற்குப் பிறகே வலுப்பெற்றது. இதுவரையும் திரிணாமுல் காங்கிரஸ், ஆம்ஆத்மி போன்ற கட்சிகள் மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீது குறைகளைச் சொல்லி வருகிறார்கள்.

இப்படி அனைத்தையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது விஜய் தமிழ்நாட்டின் முதல்வராக ஆக்கப்பட்டதும், முதல்வர் நாற்காலி யார் பிடியில் இருக்கிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இந்தத் தேர்தலைத் தமிழ்நாட்டு மக்களை விட, வாக்கு இயந்திரங்களே பெரிதும் தீர்மானித்து இருக்கிறது என்பதை நம்பலாம் அல்லவா?

தெளிவாகச் சொல்லலாம், திமுகழகம், தலைவர் ஸ்டாலின் தோல்விக்குக் காரணம் மக்கள் இல்லை. "மக்களே போல்வர் கயவர்" என்கிறார் பெரும் புலவர் திருவள்ளுவர்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian